**தலைப்பு 246 - உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 246 - உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஒக்தோபர் 24 ஆம் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 4,565.25 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 4,061.13 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 504.12 மில்லியன் அதாவது 11.04 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 2,879.20 | 2,841.16 | 38.04 | 1.32 |
| மூலதனம் | 1,686.05 | 1,219.97 | 466.08 | 27.64 |
| மொத்தம் | 4,565.25 | 4,061.13 | 504.12 | 11.04 |

**2.2 வருமானக் கணக்குகள்**

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தால் 2016 ஆம் அண்டிற்காக 35 வருமானக் குறியீடுகளுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 573,115 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் கூட்டுமொத்தமாக ரூபா 604,252.57 மில்லியன் வருமானம் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் 105.43 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | ஆரம்ப வருமானத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையேயுள்ள முரண்கள் அதிகரிப்பு /(குறைவு) | அதிகரிப்பு /(குறைவு) திருத்தப்பட்ட மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 10-02-01-01 | 42,000.00 | 35,000.00 | 36,096.75 | 1,096.75 | 3.13 |
| 10-02-01-02 | 92,000.00 | 85,000.00 | 96,605.62 | 11,605.62 | 13.65 |
| 10-02-01-03 | 31,000.00 | 55,000.00 | 35,412.91 | (19,587.09) | (35.61) |
| 10-02-01-04 | 75,000.00 | 95,000.00 | 115,336.24 | 20,336.24 | 21.41 |
| 10-02-02-01 | - | - | 1.20 | 1.20 | 100.00 |
| 10-02-02-02 | - | - | 0.38 | 0.38 | 100.00 |
| 10-02-02-03 | - | - | - | - | - |
| 10-02-03-01 | - | - | 8.09 | 8.09 | 100.00 |
| 10-02-03-02 | - | - | - | - | - |
| 10-02-03-03 | - | - | - | - | - |
| 10-02-08-00 | - | - | - | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10-02-09-00 | - | - | 16.64 | 16.64 | 100.00 |
| 10-03-03-00 | 3,000.00 | 900.00 | 1,884.50 | 984.50 | 109.39 |
| 10-03-04-00 | - | 1,900.00 | 737.66 | (1,162.34) | (61.18) |
| 10-03-05-00 | - | 250.00 | 258.80 | 8.80 | 3.52 |
| 10-03-07-10 | 8,000.00 | 750.00 | 1,579.13 | 829.13 | 110.55 |
| 10-02-12-01 | 55,000.00 | 22,000.00 | 29,120.40 | 7,120.40 | 32.37 |
| 10-02-12-02 | 30,000.00 | 12,000.00 | 9,908.50 | (2,091.50) | (17.43) |
| 10-02-12-03 | 50,000.00 | 20,000.00 | 18,395.24 | (1,604.76) | (8.02) |
| 10-04-01-02 | 14,000.00 | 14,000.00 | 15,901.81 | 1,901.81 | 13.58 |
| 10-04-04-00 | 15,000.00 | 21,000.00 | 20,458.18 | (541.82) | (2.58) |
| 10-03-10-00 | - | 15.00 | 11.05 | (3.95) | (26.30) |
| 10-04-01-01 | 114,000.00 | 105,000.00 | 121,836.21 | 16,836.21 | 16.03 |
| 10-04-02-01 | 26,000.00 | 28,000.00 | 28,169.49 | 169.49 | 0.61 |
| 10-04-03-01 | 62,000.00 | 60,000.00 | 47,839.32 | (12,160.68) | (20.27) |
| 10-04-03-99 | 500.00 | 300.00 | 8,066.53 | 7,766.53 | 2,588.84 |
| 10-04-01-04 | 2,000.00 | - | - | - | - |
| 10-04-02-99 | 18,000.00 | 15,000.00 | 10,189.52 | (4,810.48) | (32.07) |
| 10-04-01-03 | 200.00 | 2,000 | 6,395.74 | 4,395.74 | 219.79 |
| 20-06-03-00 | - | - | - | - | - |
| 10-03-09-00 | - | - | 22.67 | 22.67 | 100.00 |
| **மொத்தம்** | **637,700.00** | **573,115.00** | **604,252.57** | **31,137.50** | **5.43** |

**2.3. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 24601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 105.00 | 81.43 | 65.00 | 82.88 | 400.00 | 328.09 |

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0069/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 5 மில்லியனாக இருந்ததுடன் அந்த மீதி 2017 சனவரி 18 ஆந் திகதி தீர்க்கப்பட்டிருந்தது.

**2.5 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழ் வருகின்ற 07 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 994.21 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/00/0001/0039/000 | 683,422 |
| 6000/0000/00/0002/0052/000 | 405,700 |
| 6000/0000/00/0006/0085/000 | 23,839,455 |
| 6000/0000/00/0016/0004/000 | 26,669,579 |
| 6000/0000/00/0018/0005/000 | 92,273 |
| 6000/0000/00/0019/0010/000 | 30,444 |
| 6000/0000/00/0014/0003/000 | 942,484,969 |
| மொத்தம் | 994,205,842 |

**2.6 கணக்காய்வு அவதானிப்பு**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை.**

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | பொறுப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (ஆ) | கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 50(ii) இன் ஆலோசனையின் பிரகாரம் மதிப்பீடுகள் இயலுமானவரை சரியாகத் தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. எனினும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவின மதிப்பீடு ரூபா 3,527 மில்லியனாக இருந்த போதிலும், பின்னர் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 1,038 மில்லியன் குறைநிரப்பு நிதிஏற்பாட்டின் காரணமாக தேறிய நிதிஏற்பாடு ரூபா 4,565 மில்லியன் வரை 29 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலவின மதிப்பீடு இயலுமானவரை சரியாகத் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய மூலதன நிதி ஏற்பாட்டில் 27.64 சதவீதமும் மொத்தத் தேறிய மீண்டெழும் நிதிஏற்பாட்டில் 1.32 சதவீதமும் ஆக ஒட்டுமொத்த நிதிஏற்பாட்டில் 11.04 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும், 09 செலவின விடயங்களில் 10 சதவீதம் முதல் 55 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக் காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதிஏற்பாடு வினைத்திறனுள்ளதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) 04 செலவின விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட நிதிஏற்பாட்டிற்கு மேலதிகமாக குறைநிரப்பு நிதிஏற்பாட்டின் மூலமும் நிதிப்பிரமாணம் 66 இன் மாற்றங்களிலிருந்து ஒதுக்கப்பட்ட ரூபா 699.10 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாட்டில் ரூபா 483.25 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது மேலதிகமாக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் 69 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம், மேலதிகமாகப் பெறப்பட்ட நிதிஏற்பாட்டை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) 2016 திசெம்பர் 09 ஆந் திகதிய 252/2016 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு முதல் ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு மேலதிகமாக நிதி செயலாற்றல் கூற்று, நிதி நிலைமைக்கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று போன்ற கூற்றுக்களைத் தயாரித்து அரச கணக்குகள் திணைக்களத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் ஒப்பந்தம் 2009 ஆம் ஆண்டின் போது அரசாங்க கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தம் தாமதித்து பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையால் 2015 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்ட ரூபா 1.34 மில்லியன் தொகையான தாமதக் கட்டணம் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்காது 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட முத்திரை வரி வருமானத்தில் மாகாண சபைக்கு அனுப்ப வேண்டியிருந்த ரூபா 942.48 மில்லியன் தொகையானது உரிய மாகாண சபைகளுக்கு அனுப்பப்படாமல் 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.4 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தின் தலைவருக்கு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 35 வருமானக் குறியீடுகளினது வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானம் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற பணிப் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடுகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் ஆரம்ப வருமான மதிப்பீட்டிலும் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டிலும் உள்ளடக்குவதற்காக முறையே ரூபா 661,011 மில்லியன் மற்றும் ரூபா 632,241 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகள் அரசாங்க நிதிக் கொள்கைகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், அரசாங்க நிதிக் கொள்கைகள் திணைக்களத்தால் ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 637,700 மில்லியனாகவும், திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு ரூபா 573,115 மில்லியனாகவும் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த வகையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியில் மாற்றங்களைச் செய்வதற்கு அடிப்படையான விடயங்கள் மற்றும் அந்த விடயங்களின் தாக்கங்களை மதிப்பிட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டிருந்த போதிலும், அரசாங்க நிதிக்கொள்கைகள் திணைக்களத்தில் அது தொடர்பாக போதியளவான விளக்கமளித்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அரசாங்க நிதிக்கொள்கைகள் திணைக்களத்தில் வழங்கப்பட்ட ஆரம்ப வருமான மதிப்பீட்டிற்கும் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டிற்கும் இடையே ரூபா 64,585 மில்லியன் வேறுபாடு ஆனமையால் அந்த வேறுபாட்டிற்கு சமமான பெறுமதியுடன் தேசிய பாதீட்டு வழங்கலின் போது அரசாங்க வருமானத்தை கூடுதலாக மதிப்பீடு செய்வதற்கும், அதன் காரணமாக பாதீட்டு நிலுவை அந்த அளவினால் குறைத்து மதிப்பீடு செய்வதற்கும் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், உள்ளபடியான வருமானம் ரூபா 604,252 மில்லியன் ஆனமையால் ஆரம்ப வருமான மதிப்பீட்டிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 637,700 மில்லியன் தொகையாக இலக்கிடப்பட்ட வருமானத்தைச் சேகரிப்பதற்குப் பதிலாக சேகரிக்கக்கூடிய

வருமானத்திற்கு நேரொத்த வகையில் மீளாய்வாண்டின் போது ஆரம்ப வருமான மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் உள்ளபடியான வருமானத்தைச் சேகரித்தல் ரூபா 604,252 மில்லியனாக இருந்தது. அது ஆரம்ப மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் முறையே 95 சதவீதம் மற்றும் 105 சதவீதமாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 79,418 மில்லியனாக அதாவது 15 சதவீத அதிகரிப்பாகும். இந்த வருமானத்தின் அதிகரிப்பிற்காக பெறுமதிசேர் வரி (VAT) மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT) என்ற இரண்டு நேர் வரி மூலங்களில் ஏற்பட்டிருந்த ரூபா 82,700 மில்லியன் தொகையான அதிகரிப்பு அடிப்படையாகத் தாக்கமளித்திருந்தது. எனினும், கூட்டிணைக்கப்பட்ட மற்றும் கூட்டிணைக்கப்படாத வருமான வரி (IT) மற்றும் நிறுத்தி வைத்தல் வரி (வட்டி) போன்ற நேரில் வரி மூலமும் சேகரிக்கப்பட்ட வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 33,396 மில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வரி அறிக்கை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 295,296 கூட்டுத்தொகையான நிலுவை வரி மற்றும் தண்டப்பண வருமானம் காணப்பட்ட போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட 35 வருமானக் கணக்குகளில் டீ.ஜீ.எஸ்.ஏ. வருமானம் - 2 படிவத்தின் தொடர் இலக்கம் 8 முதல் 14 வரை காண்பிக்க வேண்டிய நிலுவை வருமானம் தொடர்பான விபரங்கள் எதுவும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறப்பட்ட நிலுவை வரி மற்றும் தண்டப் பணத்திலிருந்து ரூபா 28,878 மில்லியன் அதாவது மொத்த நிலுவையில் 9.8 சதவீதம் அளவில் அறவிடக்கூடியதாக இருந்தமையும், எஞ்சிய ரூபா 266,418 மில்லியன் தொகை அதாவது மொத்த நிலுவையில் 90.2 சதவீத அளவின் நிலுவை வரி மற்றும் தண்டப்பணத்தை அறவிடுவதால் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்ததாகவும் அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ்வாறு அறவிடல் தற்காலிகமாக கைவிடப்பட்டதற்கு தாக்கமளித்த காரணங்கள் மற்றும் கைவிடப்பட்ட சில வருமதிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| **அறவிடல் தற்காலிகமாக கைவிடப்பட்டமைக்கு தாக்கமளித்த காரணங்கள்** | **நிலுவை வரி மீதி** |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| வரி முறைப்பாடுகள் | 120,636 |
| நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை | 2,894 |
| எதிர்ப்பு காண்பித்தமை | 18,838 |
| கணனி முறையின் வழு மற்றும் ஏனைய காரணங்கள் | 66,870 |

அதன் பிரகாரம் எதிர்ப்பு காண்பித்தமை, கணனி முறையின் வழு மற்றும் ஏனைய காரணங்களாகக் காண்பித்து அறவிடல்கள் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ள ரூபா 85,708 மில்லியன் கூட்டுமொத்தமான மீதியை தீர்த்து வைக்கும் இயலுமை காணப்பட்ட போதிலும், அந்த மீதியைத்

தீர்த்து வைப்பதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(iii) பொருட்கள் மற்றும் சேவைகளின் அடிப்படையில் நிலுவை வரி ரூபா 1,949 மில்லியனாகக் காணப்பட்டது. அதற்கான காலப்பகுப்பாய்வொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அந்த நிலுவை வரி மீதிக்கான விபரங்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) இரத்துச் செய்யப்பட்ட வரி அதிகாரச் சட்டம் 08 இற்குரிய மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது ரூபா 8,134 மில்லியன் நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் அந்த தொகையிலிருந்து ரூபா 7,530 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1002-01-00 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிக் கட்டுப்பாட்டுக் கணக்கிற்குரிய திறைசேரியில் காண்பிக்கப்படுகின்ற வருமானத்தை விட திணைக்கள அறிக்கையின் பிரகாரம் வருமானம் ரூபா 178.16 மில்லியனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த வேறுபாட்டிற்குரிய காரணங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அந்தத் தொகை வருமானக் குறியீட்டு இலக்கம் 1002-01-02 இன் வருமான மீளச் செலுத்தலை (Refund) கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அவ்வாறு கழிக்கப்பட்ட தொகை ரூபா 203.70 மில்லியனாக இருந்தது.

(உ) 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதிய 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் மூலம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள கெசினோ தொழில் வருமான வரி வருமானங்களைச் சேகரித்தல் தொடர்பான அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

(i) அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2015 நவம்பர் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ஒரு நிறுவனத்திலிருந்து ரூபா 1,000 மில்லியன் வீதம் 04 கெசினோ தொழில் முயற்சிகளினால் கூட்டுமொத்தமாக ரூபா 4,000 மில்லியன் கெசினோ தொழில் வருமான வரி சேகரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையில் அது ரூபா 400 மில்லியன் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேலும், அறவிட வேண்டிய ரூபா 3,600 மில்லியன் தொகையை மீளாய்வாண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதனை நிலுவையாக அறிக்கையிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவுமில்லை.

(ii) 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகின்ற ஒவ்வொரு வருடத்திற்காகவும் 2000 ஏப்ரல் 01 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் நிர்மாணிக்கப்பட்ட மாளிகையின் சகல உரிமையாளர்களிடமிருந்தும் ரூபா ஒரு மில்லியன் மாளிகை வரியொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (4) ஆவது உபபிரிவின் பிரகாரம் அந்த ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்குரிய கட்டளை தயாரிக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் எவ்வித அறவிடலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) 2015 நவம்பர் 01 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் நிரந்தரமாக நாட்டிலிருந்து வெளியே செல்லும் சகல இலங்கைப் பிரஜைகளிடமிருந்தும் அந்த பிரஜைக்கு நாட்டிலிருந்து வெளியே கொண்டு செல்வதற்காக விடுவிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் இருபது சதவீத அளவிலான குடியகல்வு வரியினை அறவிடல் தொடர்பான ஏற்பாடுகள் விதிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவ்வாறு

குடியகல்வு வரியாக ரூபா 11 மில்லியன் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. எனினும், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் மற்றும் நாணயமாற்று கட்டுப்பாட்டுத் திணைக்களம் என்பவற்றுடன் தொடர்புகொண்டு நிரந்தரமாக இவ் நாட்டை விட்டுச் செல்கின்ற நபர்களைக் கண்டறிதல் மற்றும் அவர்களினால் நாட்டிலிருந்து வெளியே கொண்டு செல்லப்படுகின்ற வெளிநாட்டு நாணய மாற்றுக்களின் அளவை தீர்மானித்து வரி வீதத்தை அதிகரித்துக் கொள்ளும் பொறிமுறையொன்று அல்லது முறைமையொன்றைத் தயாரித்தல் தொடர்பில் திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(iv) 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்கள் இறக்குமதி செய்பவர்களிடமிருந்து அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடல் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. 2016 இன் வருடாந்த பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் மேற்கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் கீழ் 2016 சனவரி 01 ஆந் திகதி முதல் வாகன இறக்குமதியாளர்களிடமிருந்து அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்குப் பதிலாக வாகன உரிமையாளர் வரியொன்று வாகனங்கள் இறக்குமதி செய்கின்ற நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அதனை அறவிடும் அதிகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே வாகனம் இறக்குமதி செய்வதற்கான நாணயக் கடிதம் திறக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது இந்த வரித்தொகையை அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைப்பதற்கு திணைக்களத்தால் வங்கிக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், வாகன உரிமையாளர் வரியாக மீளாய்வாண்டின் போது ரூபா 157.91 மில்லியன் தொகையொன்று சேமிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திற்குரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போது இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை தொடர்பாக இலங்கை சுங்கத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் மற்றும் வாகன உரிமையாளர் வரி அளவினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் போது, இந்த வரி வங்கியின் ஊடாக அறவிடுவதற்குப் பதிலாக சுங்கத் திணைக்களத்தின் மூலம் அறவிடப்பட்டிருக்குமாயின் வாகன உரிமையாளர் வரியாக ரூபா 2,427.11 மில்லியன் அளவிலான தொகைகளை அறவிடும் இயலுமை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2016 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம், மதுபானம், புகையிலை, பந்தயம் மற்றும் சூதாட்ட வருமான வரியில் 25 சதவீதத்தை மிகைக் கட்டணமாக விதிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் ரூபா 2,000 மில்லியன் வருமானமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், உரிய அதிகாரச்சட்டம் திருத்தப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது மிகைக் கட்டண வரி வருமானம் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சுங்கத் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிகளிலிருந்து முறையே 2.28 மில்லியன் மற்றும் 10,066.55 மில்லியன் தொகை வரியிறுப்பாளர்களுக்கு மீளச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், அதற்குரிய பதிவேட்டு அறிக்கை அல்லது உறுதிப்படுத்தல்களை சுங்கத் திணைக்களத்திடமிருந்து பெற்று வருமானத்தில் மீளச் செலுத்தப்பட்ட நிதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்தி கொள்வதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

24601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 செப்தெம்பர் 18 ஆந் திகதி மரணமடைந்த ஒரு பெண் உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிக் காணப்பட்ட ரூபா 191,514 தொகை ஆதன கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1999 ஆம் ஆண்டின் போது சேவையை விட்டுச் சென்ற ஊழியர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 252,045 தொகையான ஆதனக்கடன் தொகை அவர் சேவையில் ஈடுபட்டிருக்கும் போது அவரின் பெயரில் காணியின் உரித்துறுதியை எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்து அட்டோர்ணி அதிகாரம் கையளிக்கப்படாமையின் காரணமாக அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 20 வருடங்களை விஞ்சிய ரூபா 230,534 தொகையான அறவிடமுடியாதிருந்த கடன் மீதி தொடர்பாக நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆவது அத்தியாயத்தின் 11.14 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனக் கடன் வழங்கும் போது அவற்றிற்குரிய பிணையாக உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்ட உரித்துறுதி மற்றும் அட்டோர்ணி அதிகாரம் கையளிக்கப்பட்ட ஆவணங்களின் பாதுகாப்பிற்காக திணைக்களத்தால் போதியளவான நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. எனினும், திணைக்களத்தால் காப்பகத்தில் வைப்புச் செய்யப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டுள்ள 47 உரித்துறுதிகள் காப்பகத்தில் காணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. கடன்தொகை செலுத்தி முடிவடைந்தமையினால் அந்த ஆவணங்கள் உரிய உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டதாக திணைக்களத்தால் அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும், அந்த உத்தியோகத்தர்கள் கடன் பணத்தை செலுத்தி முடிவுறுத்தியமைக்கு அல்லது அந்த உத்தியோகத்தரால் மீள உரித்துறுதி கையேற்கப்பட்டமைக்குரிய எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### வருடாந்த பெறுகைகள் திட்டம்

பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், திட்டமிடப்பட்ட பிரகாரம் குறித்த கால எல்லையில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமைக்காக 4 ஸ்கேனர் இயந்திரங்கள் மற்றும் 500 கணனி இயந்திரங்கள் என்பவற்றை கொள்வனவு செய்யும் பெறுகைச் செயற்பாடுகள் சுதந்திரமானதாகக் காணப்படவேண்டும. பெறுகைகள் தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருமான நிர்வாக முகாமைத்துவ முறைமை (RAMIS) மூலம் வரியிறுப்பாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் வரி அறிக்கைகளைக் கையேற்றல் என்பன மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்த நடவடிக்கைகளுக்காக 500 கணனிகளை துரிதமாகக் கொள்வனவு செய்வதற்கு திணைக்களத்தால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்காக வருடாந்த நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமையின் காரணமாக திறைசேரியிலிருந்து ரூபா 50 மில்லியன்

தொகையான மேலதிக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையும் பெறுகை நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக உத்தியோகத்தருக்குக் கையளிக்கப்பட்ட 56,400 வேலை விடயங்கள் (Work Items) அளவில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2016 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 03 விசேட காலத்திற்காக திணைக்களத்தின் தம்புள்ள பிரதேச அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக ரூபா 320,000 தொகையான மாதாந்த வாடகை அடிப்படையில் கட்டிடமொன்று வாடகைக்கு பெறப்பட்டிருந்த போதிலும், அக்கட்டிடம் குறித்த மாதிரிகளுக்கு இணங்காத ஒன்றாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்ட சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|
| (i) டிரான்ஸ்போமர் இயந்திரம் | 02 | 2009 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதியான 2017 யூலை 31 ஆந் திகதி வரை (உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டிடம் நவீனமயப்படுத்தும் போது வழங்கப்பட்டிருந்தது) |
| (ii) சீ.சீ.ரீ.வீ.கெமரா | 70 | 2010 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதியான 2017 யூலை 31 வரை (உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டிடம் நவீனமயப்படுத்தும் போது கட்டிடத்தின் கூரைக்கு பொருத்தப்பட்டிருந்த போதிலும் அவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை) |

(ஆ) பெறவேண்டிய மீதி

கொழும்பு 12 இல் ஸ்ரீ சங்கராஜ தாவத்தையில் அமைந்துள்ள கட்டிடப்பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்குரிய காணியில் 100 பேர்ச் காணிப்பகுதியை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கையேற்பதற்காக 2008 பெப்ரவரி 28 ஆந் திகதி ரூபா 50 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பின்னர் அந்த ஆதனம் கையேற்றல் கைவிடப்பட்டிருந்தது. எனினும், அதற்காகச் செலுத்தப்பட்ட முற்பணம் 2017 ஒக்தோபர் 24 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்ட முற்பணம் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.8 வருமான நிர்வாக முகாமைத்துவ முறைமையின் (RAMIS) செயலாற்றல்

திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது கூட்டிணைக்கப்பட்ட வருமானவரி, பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி உள்ளடங்கலாக பல வரி வகைகளின் நிர்வாக நடவடிக்கைகள் RAMIS முறைமையின் கீழ் மேற்கொள்ளல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் செயற்பாடுநிலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு,

(அ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டம், 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் மற்றும் 2009 இன் 9 ஆம் இலக்க வரி அதிகாரச் சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம், வாடகையாளரினால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் காணப்பட்ட பெறுமதிசேர் வரி, கூட்டிணைந்த வருமான வரி, நிறுத்தி வைத்தல் வரி, உழைக்கும் போதே செலுத்தும் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி போன்ற வரி வகைகளுக்குரிய 66,001 வரி அறிக்கைகள் அளவில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வரியிறுப்பாளர்களினால் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்களில் 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் III ஆவது அத்தியாயத்தின் 21 ஆம் பிரிவு, 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் XXIX ஆம் அத்தியாயத்தின் 202 ஆம் பிரிவு மற்றும் 2009 இன் 9 ஆம் இலக்க வரி அதிகாரச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு போன்ற பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய வரியிறுப்பாளர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்த போதிலும், 2017 ஒக்தோபர் 24 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அறிக்கைகளைக் கையேற்றல் மற்றும் அறிக்கையின் அடிப்படையில் வரித்தொகையைக் கையேற்றல் முறைமை ஊடாக இடம்பெற்றிருந்த போதிலும், சில வரியிறுப்பாளர்கள், அதிகாரச் சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு முரணாக குறித்த திகதியின் பின்னர் வரித்தொகை செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதிகாரச் சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் வரித்தொகை செலுத்துவதிலுள்ள தாமதத்தின் அடிப்படையில் வரியிறுப்பாளர்களிடமிருந்து தண்டப்பணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு தண்டப்பணம் அறவிடப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் அவ்வாறு அறவிடப்பட்டமை உறுதிப்படுத்தப்படாத பெறுமதி சேர்வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்குரிய தண்டப்பணம் முறையே ரூபா 503.3 மில்லியன் மற்றும் ரூபா 134.8 மில்லியனாக இருந்தது.

(இ) வரி நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) இன் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற வரி வகைகளுக்காக வரியிறுப்பாளர்கள் சமர்ப்பித்த தகவல்கள் மற்றும் அறிக்கைகள் தொடர்பாக முறைமையினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் மேலும் பரீட்சிக்கப்பட வேண்டிய விடயங்களுக்குரிய வேலை விடயங்கள் முறைமையினால் உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. எனினும், மீளாய்வாண்டிவ் அவ்வாறு உத்தியோகத்தர்களுக்கு அனுப்பப்பட்ட 56,418 வேலை விடயங்கள் குறித்த பிரகாரம் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக கணனி முறைமை தாபிக்கப்பட்டதால் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. பூர்த்தி செய்யப்படாத வேலை விடயங்களுக்கிடையே 25,565 விடயங்களின் பெறுமதிசேர் வரிக்காகவும், 19,356 வேலை விடயங்களில் கூட்டிணைந்த வருமான வரிக்காகவும் இருந்தமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறு வேலை விடயங்கள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக கணனி முறைமையின் நடவடிக்கைகளில் காலரீதியில் இடம்பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) பெறுமதி சேர்வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி தொடர்பாக வரியிறுப்பாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வரி அறிக்கையின் அடிப்படையில் பணம் செலுத்தாத சந்தர்ப்பங்களின் போது கணனி முறைமைக்கிடையே சுயமாக செயற்படும் நிலுவை வரி மற்றும் அவற்றிற்குரிய தண்டப்பண கணிப்பீட்டு அறிக்கையிடல் திட்ட முறைமையொன்று 2012 மார்ச் 31 வரை திணைக்களத்தால் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் அந்த திட்ட முறைமை நிறுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக பெறுமதிசேர் வரிக்கும் தேசத்தை கட்டியெழுப்பும் வரிக்கும் உரிய 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 வரையான வரிக் காலப்பகுதியில் வரியிறுப்பாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 15,283.31 மில்லியன் கூட்டுத்தொகையான வரி அறிக்கைக்காக பணம் செலுத்தாதிருந்த போதிலும், அதற்குரிய மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இந்த நிலுவை வரித்தொகை மற்றும் அதன் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட ரூபா 9,237.67 மில்லியன் தொகையான தண்டப்பணமும் ஆக ரூபா 24,520.98 மில்லியன் கூட்டுத்தொகையான நிலுவை மீதியொன்று 2016 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் திணைக்களத்தால் அறவிடப்பட்டிருந்தமை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் அதனை நிலுவை வரியாக அறிக்கையிடுவதற்கும் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் புறக்கணிக்கப்பட்ட வரித்தொகை நீதிபதியின் தீர்மானத்தின் அடிப்படையில் மாத்திரம் தவணைப்பணமாக அறவிடுவதற்கு முடியுமாக இருந்தது. எனினும், அதற்கு முரணாக 2016 மே மாதம் வரையிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் 35 பிரதேச அலுவலகங்களினால் ரூபா 8,914 மில்லியன் நிலுவை வரித்தொகையை தவணைப் பணமாக செலுத்துவதற்காக 918 வரியிறுப்பாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படாதிருந்தது. இவ்வாறு அரசாங்க வருமானத்தை காலரீதியில் சேகரிக்காமை அரசாங்க நிதி முகாமைத்துவத்தில் பாதகமாகத் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.10 நிதி மோசடி வடிவிலுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு வருடாந்தம் வழங்க வேண்டிய மேலதிக வரி சேகரித்தல் இலக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் சில உத்தியோகத்தர்கள் குறித்த இலக்கை அடையாதிருந்தமை உரிய அறிக்கைகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. இந்த இலக்கில் திணைக்களத்தின் ஊக்குவிப்புப் படி, உத்தேச முறைமைக்காகவும் முக்கியமானதாக அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது. 2014, 205 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவ்வாறு பூர்த்தி செய்யப்படாத இலக்குகளின் பெறுமதி அதாவது மேலதிக வரியாக அரசாங்க வருமானத்திற்கு சேர்க்கப்படாத பணம் ரூபா 4,652 மில்லியனாகும். எனினும், உத்தியோகத்தர்கள் ஊக்குவிப்புப் படிகளைப் பெறும் போது இந்த இலக்கு பூர்த்தி செய்யப்படாதிருந்ததாக அறிக்கையிடப்பட்டு ஊக்குவிப்புப் படியும் பெறப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்தின் கணனி முறைமையில் தரவுகள் மாற்றப்பட்டு ரூபா 129.03 மில்லியன் தொகையான நிதி மோசடி செய்யப்பட்டிருந்தமை திணைக்களத்தினால் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ்வாறே அதற்குரிய கணனி முறைமையில் மோசடி செய்யப்பட்ட கோவையைப் பரீட்சித்து அறிக்கையொன்றை வழங்குவது கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவனத்திற்கு 2013 ஆம் ஆண்டின் போது நீதிமன்றத்தால் கட்டளையொன்று விடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தால் கணனி கற்கை நிறுவனத்திற்கு ரூபா 1.4 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் நிதி மோசடியை வெளிப்படுத்துவதற்காக தேவையான அறிக்கையை வழங்குவதற்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவனம் தவறியமையின் காரணமாக செலுத்தப்பட்ட பணம் சிக்கனமற்ற செலவினமாக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நிதி மோசடிக்குரிய நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.11 தீர்வுகாணப்படாத கணக்காய்வு பந்தி

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக திணைக்களத்தால் சீரமைக்கப்படாத பந்தியின் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2015 | 3.7 | உள்நாட்டு இறைவரிக் கட்டிடத்தை நவீனமயப்படுத்துவதற்கும் ஒன்பது மாடிகளையுடைய மோட்டார் வாகனத் தளத்தை நிர்மாணிப்பதற்காகவும் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 1,437 மில்லியன் தொகையில் ரூபா 1,318 மில்லியன் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அந்த நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

### 3.12 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வரியிறுப்பாளர்களினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வழங்கப்படுகின்ற காசோலைகள் மதிப்பிழக்கும் போக்கு வருடாந்தம் உயர்வடைந்து செல்கின்ற போதிலும் அதனை சீரமைப்பதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மதிப்பிழந்த காசோலைக்காக பணத்தை அறவீடு செய்தலும் மந்த நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இவ்வாறு மதிப்பிழந்த காசோலைகளின் எண்ணிக்கை 5,936 ஆக இருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 1,976 மில்லியனாக இருந்தது.

(ஆ) திணைக்களத்தின் சட்டப் பிரிவனால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் வரி அதிகாரச் சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2016 மே 30 இல் உள்ளவாறு நிலுவை வரியை அறவிடுவதற்காக நீதிமன்ற

நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட 367 வழக்குகள் காணப்பட்டமை அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும், திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகள் மற்றும் 36 பிரதேச அலுவலகங்களில் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அந்த எண்ணிக்கை 1,520 ஆக இருந்தது. திணைக்களத்தில் சட்டப் பிரிவு தனியாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பிரிவின் மூலம் தலைமை அலுவலகத்தினதும் பிரதேச அலுவலகங்களினதும் காணப்படுகின்ற நிலுவை வரிகளுக்குரிய வழக்குகள் தொடர்பாக இணைப்பொன்றை ஏற்படுத்துவதற்காக போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக தொடுக்கப்பட்டுள்ள சில வழக்குகள் முறையான திட்ட முறைமையொன்று பேணப்பட்டு தொடுக்கப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு போதியளவான சான்றுகள் சட்டப்பிரிவில் காணப்படவில்லை. மேலும், பிரதேச அலுவலகத்தினால் தொடர்புபட்டதாக அறிக்கையிடப்பட்ட சில வழக்குகள் உள்ளபடியான வழக்குகளாக இருந்தமைக்கான சான்றுகள் சட்டப்பிரிவில் காணப்பட்டவில்லை. வழங்கப்பட்ட வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் நிலுவை வரித்தொகை சட்டரீதியாக உரிய தரப்பினரால் செலுத்தப்படுமா என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளும் சட்டப் பிரிவினால் கையாளப்பட்டிருக்கவில்லை. பெறக்கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம் அவ்வாறு தொடர்ப்பட்ட 413 வழக்குகளும் மாத்திரம் அறவிடவேண்டியதாகக் காணப்பட்ட நிலுவை வரித்தொகையின் அளவு ரூபா 1,771 மில்லியன் ஆகும்.

(இ) திணைக்களத்திற்கு கிடைத்த வரி முறைப்பாடுகள் தொடர்பாக துரித நடவடிக்கை எடுக்கப்படாமையினால் அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய வரி வருமானம் காலரீதியில் கிடைக்கப்பெறாதிருந்தமையும், அது வரியிறுப்பாளர்களின் தரப்பின் பிரகாரம் சாதகமான நிலையொன்று இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. திணைக்களத்தின் கீழ் உள்ள பெரிய அளவிலான வரிசெலுத்துபவர்களின் 6 பிரிவுகள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் போது கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2012/13 மதிப்பீட்டு வருடம் முதல் 2014/15 வரையான 03 மதிப்பீட்டு வருடங்களுக்குரிய வருமானவரி, பெறுமதி சேர் வரி, மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றிற்காக வழங்கப்பட்ட மேலதிக மதிப்பீடு தொடர்பாக கிடைக்கப்பெற்ற 594 வரி முறைப்பாடுகளில் 9 மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பெறக்கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம், கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் பெறுமதி ரூபா 53,804 மில்லியனாக இருந்ததுடன் தீர்க்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின் பெறுமதி ரூபா 67 மில்லியனாகும். தீர்க்கப்படாதுள்ள வரி முறைப்பாடுகளுக்கிடையே மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 47,457 மில்லியன் தொகையான 427 முறைப்பாடுகள் பெரிய அளவிலான வரி செலுத்துபவர்களின் முறைப்பாட்டுப் பிரிவில் காணப்பட்டதுடன் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 5,476 மில்லியன் தொகையான 63 முறைப்பாடுகள் ஆணையாளர் நாயகத்தின் கீழ் தீர்ப்பதற்கு இருந்தமை மேலும் வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) அரசாங்க வருமான முகாமைத்துவம் தொடர்பாக வருடாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்ற பாதீட்டு முன்மொழிவுகள் தொடர்பாக திணைக்களத்தின் பங்களிப்பு போதியளவான மட்டத்தில் காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டின் போது அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தொடர்பாக 18 பாதீட்டு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 04 முன்மொழிவுகள் மாத்திரமே அமுல்படுத்தக்கூடிய மட்டத்தில் காணப்பட்டது. அதன் பிரகாரம் உத்தேச வருமான இலக்கை அடையும் போது வருடாந்தம் பாதீட்டு முன்மொழிவுகள் மூலம் போதியளவான பங்களிப்பொன்று இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) 2010 இன் 16 ஆம் இலக்க கொள்வனவுகளைப் புறக்கணிக்கும் வரி தீர்த்தல் (விஷேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவுகள் புறக்கணிக்கப்பட்ட ரூபா 125,206 மில்லியன்

தொகையான வரித்தொகையைத் தீர்த்து வைப்பதற்காக கொடுப்பனவுகள் புறக்கணிக்கப்பட்ட வரியை அறவீடு செய்யும் பிரிவின் பெயரில் புதிய பிரிவொன்றை ஸ்தாபித்து அப்பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும், 2014 இன் 14 ஆம் இலக்க கொடுப்பனவுகள் புறக்கணிக்கப்பட்ட வரிகளைத் தீர்த்தல் (விஷேட ஏற்பாடுகள்) திருத்த அதிகாரச் சட்டத்தின் மூலம் இந்த நிலுவை வரியை அறவிடுவதற்காக மேலதிக ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 82,971 மில்லியன் நிலுவை வரித்தொகை மாத்திரம் அதன் மூலம் தீர்த்து வைப்பதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட மீதி ரூபா 42,235 மில்லியன் ஆகும். மேலும் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 4 வரியிறுப்பாளர்களிடமிருந்து அறவிடவேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 365 மில்லியன் நிலுவைப் பணத்தை தவணைப்பணமாகச் செலுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தத் தொகையிலிருந்து ரூபா 6 மில்லியனை மாத்திரம் அறவிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்தால் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தும் போது மெதுவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) பிரதேச அலுவலகத்தை நவீன மயப்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டமையினால் அவைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து வருமானம் உருவாகின்ற வழிகளை கட்டியெழுப்புதல் திணைக்களத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பிரதேச அலுவலகங்களை நவீனமயப்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தலுக்காக ரூபா 40 மில்லியன் தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 22 மில்லியன் செலவிடப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டுகளின் போதும் இவ்வாறு நிதிஏற்பாட்டில் சேமிப்பு அறிக்கையிடப்பட்டமையின் காரணமாக திணைக்களத்திற்கு கிடைக்கின்ற நிதிஏற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) பெறுமதி சேர் வரி அறவிடமுடியுமான எல்லை 2013 சனவரி 01 ஆந் திகதி முதல் காலாண்டிற்கு ரூபா 3.75 மில்லியன் அல்லது வருடத்திற்கு ரூபா 15 மில்லியன் வரை உயர்த்தி வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு வரி எல்லையை உயர்த்தி வைத்தலுடன் 17,000 வரியிறுப்பாளர்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையொன்று வரித் தொகுதியிலிருந்து நீக்குவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் உரிய அந்த வரிக் கோவைகளும் தற்காலிகமாக வலுவிழக்கச் செய்யப்பட்டிருந்தது. எனினும், அந்த வரியிறுப்பாளர்களின் பதிவினை இரத்துச் செய்து அதுவரையில் விநியோகிக்கப்பட்ட பெறுமதி சேர் வரி பதிவுச் சான்றிதழ் மீண்டும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் அவ்வாறு வலுவிலக்கச்செய்யப்பட்ட 27 வரியிறுப்பாளர்களிடமிருந்தும் 10 அரசாங்க நிறுவனங்களிடமிருந்தும் ரூபா 7.55 மில்லியன் அளவிலான பெறுமதி சேர் வரித்தொகை சேமிக்கப்பட்டிருந்த போதிலும் வரி அறிக்கை சமர்ப்பித்தல் அல்லது திணைக்களத்திற்கு வரித்தொகையை அனுப்புதலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பல்வேறு திட்டமுறைகளில் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 106(7) ஆம் பிரிவின் பிரகாரம் நபர்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து அதற்காக கோரி அந்த அறிக்கைகளின் தகவல்களின் அடிப்படையில் புதிய வரிக் கோவை திறக்கப்பட்டு வரி வீதத்தை விரிவுபடுத்தல் மற்றும் வரி வருமானத்தை மேலே உயர்வடையச் செய்தல் திணைக்களத்தின் ஒரு நோக்கமாக இருந்தது. அந்த

பணிகளை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தில் தகவல் பிரிவும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின பிரகாரம், 2015 ஆம் ஆண்டின் போது 33,139 "1 வீ அறிக்கை" (1V Return) பல்வேறு நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டிருந்த போதிலும் அதில் 20,665 அறிக்கை மாத்திரம் திணைக்களத்திற்கு கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் 12,474 அறிக்கைகள் திணைக்களத்திற்கு மீளக் கிடைத்திருந்ததுடன் அவ்வாறு கிடைக்கப்பெறாத அறிக்கை தொடர்பாக அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் காலரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே தகவல் பிரிவிற்கு கிடைத்த "1வீ அறிக்கை" திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளுக்கும் பிரதேச அலுவலகங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த தகவல்களைக் அடிப்படையாகக் கொண்டு பிரதேச அலுவலகங்களினால் புதிதாக வரிக்கோவை திறக்கப்பட்டிருந்ததா என கண்டறியும் திட்ட முறைமையொன்று திணைக்களத்தின் தகவல் பிரிவில் காண்பபடவில்லை.

## 3.13 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 1247 | 1194 | 53 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 36 | 30 | 06 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1055 | 906 | 149 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 437 | 410 | 27 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 2775 | 2542 | 235 | 02 |

(ஆ) 2016 திசெம்பர் இல் உள்ளவாறு திணைக்களத்தின் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 235 ஆக இருந்ததுடன், அதில் உள்நாட்டு இறைவரிச் சேவையின் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 53 ஆகும். அவ்வாறே உதவிப் பதவியணியினர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 182 ஆகும். உள்நாட்டு இறைவரிச் சேவையின் உத்தியோகத்தர்களுக்கு பரிசோதனை நடவடிக்கைகளுக்காக வரிக் கோவைகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் உத்தியோகத்தரால் அவற்றின் கணக்காய்வு நடவடிக்கைகள் மற்றும் வழங்கப்பட்டுள்ள இலக்குகளின் பிரகாரம் மேலதிக வரி சேகரிக்கப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம், உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டமை, மேலதிக வரி வரமானத்தைச் சேகரிப்பதற்கு நேரடியான தாக்கமொன்றை ஏற்படத்தியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது உள்நாட்டு இறைவரிச் சேவையின் உத்தியோகத்தர்களில் 63 சதவீதம் தலைமை அலுவலகத்திலும் எஞ்சிய 37 சதவீதம் பிரதேச அலுவலகங்களுக்கும் நியமிக்கப்பட்டிருந்தனர். எனினும், திணைக்களத்தால்

உழைக்கப்பட்ட மொத்த வருமானத்தில் 96 சதவீதம் தலைமை அலுவலகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், பிரதேச அலுவலகங்களிலிருந்து 04 சதவீதம் மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உள்நாட்டு இறைவரிச் சேவையின் உத்தியோகத்தர்களில் பல்வேறு பிரிவுகளுக்கு நியமித்து வருமானம் சேகரிப்பதை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டு செயற்படுவதையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) பாரியளவிலான வரி செலுத்துபவர்களுக்காக மூன்று பிரிவுகளின் கீழ் காணப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றைப் பரீட்சிப்பதற்காக நியமிக்கப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சேவையின் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தொடர்பாக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்குரிய சில தரவுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **பிரிவு** | **வரிக்கோவை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை** | **பிரிவில் காணப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை** | **2014 மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் வரி அறிக்கைக்காக கணக்காய்வு செய்யப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை** | **2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அறிக்கையிடுவதற்கு முன் வரித்தொகை** |
|---|---|---|---|---|
| | | | | **ரூபா. மில்லியன்** |
| 8 பிரிவு | 11 | 450 | 172 | 3,880.16 |
| 6A பிரிவு | 10 | 409 | 126 | 2,751.08 |
| 6C பிரிவு | 15 | 567 | 131 | 18,696.54 |
| மொத்தம் | 36 | 1426 | 429 | 25,327.78 |

மேற்கூறப்பட்ட தரவுகளின் பிரகாரம் 03 பிரிவுகளில் 1,426 வரிக் கோவைகள் காணப்பட்டதுடன் அவற்றைக் கணக்காய்வுக்காக 36 உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு உத்தியொகத்தருக்கு அண்ணளவாக 40 வரிக் கோவைகள் அளவில் கணக்காய்வு நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டிருந்தன. எனினும், குறித்த இரண்டு வருட காலத்தில் ஒரு உத்தியோகத்தரால் அண்ணளவாக 12 வரிக்கோவைகள் அளவில் கணக்காய்வு செய்யப்பட்டு 429 வரிக்கோவைகளில் இருந்து ரூபா 25,327.78 மில்லியன் மேலதிக வரி மற்றும் தண்டப்பணம் என்பன சேகரிக்கப்பட்டிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தத. அதன் பிரகாரம் இவ்வாறான பாரியளிவில் வரி செலுத்தும் துறைகளில் வரிக் கோவைகள் அதிக எண்ணிக்கையில் கணக்காய்விற்கு உட்படுத்தும் வகையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு மேலதிக வரி வருமானத்தை உயர்வடையச் செய்வதற்கு திணைக்களத்தில் போதியளவான கவனம் செலுத்தப்பட்டமையும் அவதானிக்கப்படவில்லை.